# 13 பத்துக் கட்டளைகள்



படம் 13.1 - சீனாய் மலை உச்சியில் பத்துக் கட்டளைகளைப் பெறல்

இறைவன் சீனாய் மலையின் உச்சியில் மோசேயிடம் பத்துக் கட்டளைகளைக் கொடுத்த விதத்தினை இப்படத்தில் காணலாம். இக் கட்டளைகளைப் பெறுவதற்கு முன்னர் மோசே 40 நாட்கள் செபத்தில் ஈடுபட்டார்.

நாம் நற்பண்புள்ளவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் வாழ வழிகாட்டவே இறைவன் இப்பத்துக் கட்டளைகளைத் தந்துள்ளார். இறைத் அன்பினை அடித்தளமாகக் கொண்டு அயலவர்களை அன்பு செலுத்துவதே கிறிஸ்தவ திருமறையின் அடிப்படையான படிப்பினையாகும். இதனைக் கடைப்பிடித்து வாழ இறைவனின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும்.

## பத்துக் கட்டளைகள்

**முதல் மூன்று கட்டளைகள்**

1. உண்மையான ஒரே இறைவனை மட்டுமே ஆராதனை செய்வாயாக
2. இறைவனின் திருநாமத்தை அநாவசியமாக பயன்படுத்தாதிருப்பது.
3. ஓய்வு நாளாகிய ஞாயிற்றுக் கிழமையை பரிசுத்தமாக வைத்திருப்பது.

**மிகுதி ஏழு கட்டளைகள்**

4. தந்தை தாய் பேணுதல்.
5. கொலை செய்யாதிருத்தல்.
6. விபச்சாரம் செய்யாதிருத்தல்.
7. களவு செய்யாதிருத்தல்.
8. பொய் உரையாதிருத்தல்.
9. பிறர் தாரத்தை விரும்பாதிருத்தல்.
10. பிறர் பொருளை விரும்பாதிருத்தல்.

இந்த இறை கட்டளைகள் ஒழுக்கமுள்ள, சட்டங்களை மதிக்கும் ஒருவரை உருவாக்குவதற்கான வழிகாட்டல்களாகும்.

| இறை கட்டளைகள் | நாம் பெறுகின்ற செய்தி |
|---|---|
| முதலாவது இறை கட்டளை | மூவொரு இறைவனை மட்டும் நாம் ஆராதனை செய்ய வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. |
| இரண்டாவது இறை கட்டளை | உண்மைக் காரணம் ஒன்று இல்லாமல் வெறுமனே சத்தியம் செய்வதும் பொய்ச் சத்தியம் செய்வதும் பரிசுத்தமானவற்றைச் சபிப்பதும் செய்யத் தகாதனவாகும். |
| மூன்றாவது இறை கட்டளை | ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத் திருப்பலியில் பங்கு பற்றுதல் வேண்டும். ஓய்வு நாளாக அனுசரிப்பதோடு மட்டுமன்றி பிறர்க்கு உதவிகள் செய்தலும் வேண்டும். இந் நாட்களிலும் ஏனைய நாட்களிலும் தவறான செயல்களைச் செய்யாது தூய்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். |
| நான்காவது இறை கட்டளை | இவ்வுலகில் இறைவனைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற எமது பெற்றோரை நாம் மதித்தல் வேண்டும். ஆசிரிய, ஆசிரியைகள், பெரியோர், திருச்சபையின் தலைவர்கள், அரச அதிகாரிகள் ஆகியோரையும் மதித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஐந்தாவது இறை கட்டளை | அயலவர்களின் உடல், ஆன்மீக நலன்களை மதித்து அமைதியோடு வாழ வேண்டும். எமது உடல் நலன் பற்றியும் அக்கறை கொண்டிருக்க வேண்டும். |
| ஆறாவது இறை கட்டளை | தகாத வார்த்தைகள் பேசுதல், தகாதவற்றைப் பார்த்தல் என்பன தவிர்க்கப்பட வேண்டும். தூய்மையான உள்ளம், நன்நடத்தை என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும். |
| ஏழாவது இறை கட்டளை | பிறருடைய பொருட்களை எடுக்காமல் இருப்பது, அவற்றைப் பாதுகாப்பது, பிறருடைய உரிமைகளை மதிப்பது போன்ற செயல்களைப் பழகிக்கொள்ள வேண்டும். |
| எட்டாவது இறை கட்டளை | எப்பொழுதும் உண்மை பேசுபவர்களாக இருத்தல் வேண்டும். |
| ஒன்பதாவது இறை கட்டளை | திருமணமானவரோடு முறையற்ற உறவு கொண்டிருக்கக் கூடாது. |
| பத்தாவது இறை கட்டளை | தாம் பெற்றுக் கொண்டவற்றில் திருப்தி அடைவதோடு, பிறரின் முன்னேற்றத்தில் மகிழ்ச்சியடைய வேண்டுமெனக் கூறப்படுகிறது. |

மேலுள்ள அட்டவணை பத்துக் கட்டளைகளின்படி நாம் வாழ்வதற்கான வழிகாட்டல்களைத் தருகிறது.

**செயற்பாடு**

பத்துக் கட்டளைகளை ஒழுங்காக எழுதி கையடக்கத் தொலைபேசி ஒன்றை ஆக்கமாகத் தயாரியுங்கள்.



***வாழ்க்கைக்கு..........***

*இரவில் நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் ஒவ்வொரு கட்டளைகளுக்கும் எதிராகச் செய்தவற்றை நினைத்து, தவறு செய்திருப்பின் இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள். மீண்டும் அத்தவறினை செய்யாதிருக்க உறுதியும் பூணுங்கள்.*